**Friday Sermon/** வெள்ளிக்கிழமை குத்துஃபா

**(28 July 2017) 04 Dhul Qaddah 1438 Hijira)**

# CONTROVERSY ON THE WORD JIHAD

## ஜிஹாத் என்னும் வார்த்தையின் மீதான வாக்குவாதம்



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும் தஅவ்சுதும் அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

2017 ஜுலை மாதம் 18 ம் தேதி செவ்வாய்கிழமை பிளாக்கில் (Flacq) வைத்து நடைபெற்ற ஈதுல்பித்தர் கொண்டாட்டத்தின் போது துணைப்பிரதமர் ""சௌக்கத்தலி சூதூண்" இஸ்லாமின் மதிப்புக்கும் மரியாதைக்கும் மாறான நிலையில் கூறிய வார்த்தைகள் இஸ்லாமுக்கு மிகப்பெரிய களங்கம் விளைவித்திருக்கிறது. அன்னார், அந்த வார்த்தைகள் மூலம் இஸ்லாமின் மீது அழுக்கு பொருட்களை தூக்கி வீசி இருக்கின்றார். ஒரு உண்மையான முஸ்லீமுக்கு உகந்த நிலையிலான செயலல்ல அன்னார் செய்திருப்பது என்பதை இத்தருணத்தில் கூறாமலிருக்க முடியாது. இஸ்லாமின் பெருமையை எடுத்துரைக்க வேண்டிய ஒரு சபையில் அன்னார் இந்த மோசமான வார்த்தைகளைக் கூறிக்கொள்ள தைரியம் காட்டியிருக்கின்றார். என்ன அங்கு நிகழ்ந்தது? அன்னார் கூறிய வார்த்தைகள், ஏராளம் மௌலானாக்கள் அணி சேர்ந்த அந்த சபையில் வைத்து எதிர்கட்சி தலைவராகிய சேவியர் லக் டுவலுக்கு எதிராக மிக மோசமான வார்த்தைகளால் அடிப்படையற்ற விஷயங்களை எழுப்பிக்கொண்டார். அத்தகை வார்த்தைகளை இங்கு பயன்படுத்த கூடாது என்று கூறிக்கொள்ள எவர் ஒருவரும் அங்கு ஆயத்தமாகவில்லை என்பது வெட்க கேடாகும்.

சௌதி அரேபியாவுக்கு சாதகமாக (கத்தறுடனான புறக்கணிப்புக்கு) அதாவது கத்தறுடனான அனைத்து உறவுகளையும் முறித்து விட அன்னார் முன் கை எடுத்துக்கொள்ளவும், இதைக் குறித்த ஒரு கேள்வியை நாடாளமன்றத்தில் எழுப்பிக்கொள்ளவும், அதுவாயிலாக பெரும்பாலான மக்களின் உணர்சிகளை தூண்டிக்கொள்ளவும் செய்தார். அரசன் சல்மானை அவமதிக்குமளவிற்கு சில வார்த்தைகளை எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்தார். அதுவே உண்மையில் துணைப்பிரதமர் சூதூனை புண்படுத்தியது. அவ்வாறு, பிளாக்கில் நடைபெற்ற ஈதூல்பித்தர், இரவு உணவு நேரத்தின் போது அன்னார் கீழ் வருமாறு அறிக்கை விடுத்தார். **"Had my bodyguard given me a revolver (gum), I would have killed Xavier Duval in parliament. I would have killed him... Anyway what this is called Jihad. Because, I have good relations with Saudi Arabia."**

**“என் மெய்க்காப்பாளர் ஒரு துப்பாக்கி எனக்கு வழங்கியிருந்தால் “சேவியர் டூவலை” நாடாளமன்றத்தில் வைத்து கொன்றிருப்பேன் நான் அன்னாரை கொலை செய்திருப்பேன். இதற்கே ஜிஹாத் என கூறுவது. ஏனெனில் எனக்கு சௌதி அரேபியாவுடன் மிக நல்ல உறவிருக்கின்றது.”**

அன்னாரின் அறிவின்மை காரணமாகவே துணைப்பிரதமர் சூதூன், எதிர்கட்சித் தலைவருக்கு எதிராக இத்தகையிலான ஒரு கொலை மிரட்டல் விடுத்துள்ளது. மட்டுமின்றி அந்த கொலை மிரட்டலை அன்னார் இஸ்லாமுடன் தொடர்புபடுத்துகின்றார். அதற்கு ஜிஹாத் என்ற வார்த்தையை (தவறாக) பயன்படுத்துகின்றார். பெரும்பாலான மக்களின் நல்லொழுக்க உணர்ச்சியை எழுப்பிக் கொள்ளுமளவிற்க்கான ஒரு செய்கைக்கு அன்னார் ஆரம்பமிட்டார். கத்தருக்கு எதிரான இந்த பிரச்சனையை வெளிப்படுத்திக் கொண்டதும் அன்னாராகும். உண்மையில் இதை அன்னார் செய்துக்கொள்ள வேண்டியதல்ல, மாறாக இப்பிரச்சனையை வெளிப்படுத்திட வேண்டுமென்றால், இவ்விஷயத்தில் பிரதமரோ அல்லது வெளிவுறவு அமைச்சரோ ஈடுபட்டுக்கொள்ள வேண்டிய தாகயிருந்தது. துணைப்பிரதமர் சூதூண் இதில் ஈடுபட்டுக் கொண்டது, தவறான நிலையிலாகும். 2017 ஜுன் மாதம் 6-ம் தேதி இந்த பிரச்சனையில அன்னார் ஈடுபட்டது முற்றிலும் முட்டாள்த்தனமான நிலையிலாகும். அன்னார் இதற்க்காக பயன்படுத்திக்கொண்டது ஈது கொண்டாட்ட மேடையினையாகும். இந்த பிரச்சனையின் பெயரில் ஒரு கொலை மிரட்டல்! அதற்கு ஜிஹாத் என்ற வார்த்தையை தவறாக பயன்படுத்தல்!

அன்னார் பயன்படுத்திய வார்த்தை இனவேற்றுமையினை தூண்டிக்கொள்வதாகும். மௌரிஷியஸ் என்பது பல்வகைப்பட்ட கலாச்சாரங்களும் மதங்களும் வானவில் போன்று ஒற்றுமையுடன் இயங்கும் நாடாகும். அனைத்து வகைப்பட்ட மத நம்பிக்கையாளர்களும் இங்கு நட்புடன் வாழ்ந்து வருகின்றனர். ஓவ்வொருவரும் ஏனைய மதங்களை மதித்துக்கொள்வோர்களாகயிருக்கின்றனர். ஆனால் சூதூண் பயன்படுத்திய இந்த வார்த்தை என்னும் காற்று, ஒவ்வொரு நாளும் பின் செல்ல செல்ல விவாதத்தின் அக்கினியை எரிய வைக்கின்றது. ஏனெனில் சூதூணைப் போன்ற ஒருவரின் வர்த்தைகளால் காயப்படுத்துவது இஸ்லாமாகும். இஸ்லாம் அதன்

மகத்துவம் வாய்ந்த போதனைகள் வாயிலாக கற்பிப்பது, சமாதன செய்தியும் சமாதன வாழ்க்கையும் ஆகும். உங்களின் (முஸ்லீம்களின்) சமாதானமான பருமாற்றம் வழியாகவே ஏனையவர்களுக்கு சமாதானத்தை அடைந்து விட முடிவது.

எதிர் கட்சிசித் தலைவர், துணைப்பிரதமர் சௌக்கத்தலி சூதானின் மீது குற்றம் சாட்டியிருக்கின்றார். தண்டனை சட்டத்தின் 288 ம் ஆர்ட்டிக்கிள் அன்னார் அத்துமீறக்கொண்டார். சூதான், சேவியர் சூவலுக்கு எதிராக கூறிய குற்றசாட்டுகளுக்கு அன்னார் கண்டனம் தெரிவித்திருக்கின்றார். எதிர் கட்சித்தலைவர் சௌதி அரேபியாவுக்கு எதிராகவோ, முஸ்லீம் நம்பிக்கைக்கு மாறாகவோ எந்த ஓர் வார்தையும் கூறியதில்லை. அதனால் எதிர்க்கட்சித்தலைவர், துணைப்பிரதமருக்கு எதிரில் பயங்கரவாத தடுப்புசட்டத்திற்க்கு கீழ் ஒரு புகார் கொடுத்துள்ளார். . அன்னார் புகார் சமர்பித்திருப்பது, துணைப்பிரதமர் சூதாண் எதிர்க்கட்சி தலைவருக்கு நேர் கொலை மிரட்டல் விடுத்ததன் பெயரிலாகும்.

ஜிஹாத் என்ற வார்தையின் பொருளை உணராமல், துணைப்பிரதமர் சூதாண் அதை பயன்படுத்திக்கொண்டார் என்றால், அதைக் குறித்து உணராமல் எதற்கு அதை பயன்படுத்திக்கொண்டார்? பெரும்பாலான மக்களின் கோபத்தை தூண்டும் இந்த பிரச்சனை உருவாகியது, ஜிஹாதைக்குறித்து மக்கள் அவர்களின் அறியாமை காரணமாக இவ்விஷயத்தைக் குறித்து பேசிக் கொள்வதனாலாகும். இது வாயிலாக இஸ்லாமுக்கு எதிராகவே பேசுகின்றோம் என்பதை அவர்கள் பகுத்தறிவதில்லை. சிலர் கூறுகின்றனர், **ஜிஹாத் என்றால் பலத்காரம், கொலை செய்தல், இரத்தம் சிதறல் (Violence, Killing, Blood Shedding) போன்ற பலவகையான பொருள்கள். மிக கவலைக்குரிய விஷயம், ஜிஹாதின் உண்மையான பொருளை கற்ப்பிக்க எந்த ஓர் மௌலானாக்களுக்கும் முடிவதில்லை. இந்த உண்மை எஞ்சுகின்றது**.

அதனால் நீங்கள் புரிந்துக்கொள்ளுங்கள்! நீங்கள் இஸ்லாமில் பித்-அத்துகளை உருவாக்கும்போது, அந்த பித்- அத்துகள் உங்களை எந்த வழிக்கு கொண்டு செல்கின்றது என்பதை குறித்து யோசித்ததுண்டா? ஈது உணவகங்களும் விருந்தினர் கூட்டங்களும் அமைக்க இந்த ஆள்கள் எங்கிருந்து கற்றனர்? அரசியல் கட்ச்சிகளைச் சார்ந்த ஆள்களுக்கு அழைப்பு

விடுத்து, இத்தகை நிகழ்ச்சிகளை அரசியல்களமாக்கிட எவர் அனுமதியளித்தார்? ஈதுல் பித்தர் முடிந்து ஒரு மாதற்த்திற்க்கு மேலாகியது, ஆனால் அவர்கள் இப்போதும் ஈது விருந்தினர் கூட்டங்கள் அமைத்து வருகின்றனர். இவ்விஷயங்களை செய்வதற்க்கு ஹஸ்ரத் முகம்மது (ஸல்) அவர்கள் உங்களுக்கு அனுமதியளித்தாரோ? அன்னார் இவ்வாறு கொண்டாடினாரோ? ரமலான் மாதத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட படிப்பினை என்ன? இதைக்குறித்து ரமலான் மாதத்திலும் அதை தொடர்ந்தும் நான் பேசியிருந்தேன். அதாவது ரமலான் என்பது அருளுக்குரிய ஒரு மாதமேயாகும். அம்மாதத்தில் நீங்கள் ஆன்மீக தண்ணீரைக் கொண்டு மிக நல்ல நிலையில் குளித்துக்கொண்டீர்கள். அல்லாஹுவின் கட்டளைகளுக்கேற்ப நீங்கள் செயல்ப்பட்டீர்கள். அவையாவும் ஆரதைனைகளாகயிருந்தது. ரமலான் மாதத்திற்க்கு பிறகு நோன்பு நோற்ப்பை முடித்துக்கொண்டப்பின் அல்லாஹ் உங்கள் மீது திருப்த்தியடைந்து, உங்களுக்கு மகிழ்ந்திடுவதற்க்காக ஒரு நாளை அளித்துக்கொண்டான். அந்நாளை நாம் ஈது என கூறிக்கொள்கின்றோம்.

**ஈதுல்பித்தர் என்பது ஒரு நாளின் கொண்டாட்டம் மட்டுமேயாகும். மறுநாள் (ஈதுக்கு பிறகு) அவர்கள் ஆணாகயிருந்தாலும் பெண்ணாகயிருந்தாலும் சரி, தமக்கு இழக்க நேர்ந்த நோன்பை புர்த்திகரித்துக்கொள்ளலாம். ரமலானில் நோன்பை இழக்காமலிருப்போர்களுக்கு சுன்னத் நோன்புகளை நோற்றுக்கொள்ளலாம். அதைப்போன்றே ரமலான் மாதம் ஒரு பயிர்ச்சி மாதமாகும். ரமலானுக்கு பிறகு வரும் 11 மாதங்களிலும் நற்செயல்களை மேலும் புரிந்துக்கொள்வதற்க்கும் பூர்த்திசெய்வதற்க்குமான பயிற்ச்சி மாதமாகும். இந்த மாதத்தின் மிக சிறந்த போதனை, நீங்கள் ஒரு நல்ல மனிதராக பரிணமித்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். நேர்மையாளரகிய ஒரு மனிதராக மாறிக்கொள்ள வேண்டும் என்பதாகும். நீங்கள் ஒரு போதும் விதண்டாவாதம; (quarrelsome) செய்யும் நபராக மாறிடக்கூடாது என ரமலான் மாதம் நம்மை கற்ப்பித்தல்லவா? நம்மிடம் எவராவது சண்டைக்கு வந்தால் கூட தாம் நோன்பு நோற்ப்பவராகயிருக்கின்றேன் என கூறி சச்சரவுக்கு முடிவுகட்டிட வேண்டும். முஸ்லீம் என்ற நிலையில் துணைப்பிரதமர் சூதுாண் செய்தது உண்மையில் பரிதாபத்திற்க்குரிய விசயமல்லவா? இங்கு எடுத்துக்கூற வேண்டிய ஒரு விஷயம் என்பது, ரமலான் சென்றடைந்த உடனே ஈதுல்பித்தரின் பெயரில் ஒரு விருந்தினர்**

கூட்டம் அமைத்து அதை அரசியல்களமாக மாற்றிக்கொண்டனர். அவ்வாறு ஈதுல்பித்தரின் நோக்கத்திற்க்கே களங்கத்தை ஏற்ப்படுத்திக்கொண்டார்கள். ஈதுல்பித்தர் என்பது முஸலீம்களைப் பொறுத்தவரையில் புனிதமான ஒரு கொண்டாட்டமாகும். அல்லாஹ்வின் திருப்திக்காக ஒரு மாத கால நோன்பு நோற்பின் போது, நாம் எல்லாவகைப்பட்ட தியாகங்களும் செய்தோம். அத்தகை தியாகங்கள் புரிந்தோர்களுக்கான நாளாகும் ஈதுல்பித்தர். அருள் நிறைந்த ரமலான் மாத நோன்பு நோற்பு நாட்களில் அல்லாஹ்வுக்காக வாழ்ந்தவர்களுக்கும், தங்களை படைத்தவனுக்காக இரவு பகல்களை செலவு செய்தவற்களுக்குமான மகிழ்ச்சியின் நாளாகும் ஈதுல்பித்தர். ஈதுல்பித்தர் தின கொண்டாட்ட வேளைகளில், முல்லாக்கள் அரசியல் வாதிகளிடம் சேர்ந்து என்ன செய்திருக்கின்றார்கள் என்பதைப் பாருங்கள். அருள் நிறைந்த ரமலான் மாதத்திற்க்கு பிறகு சூதூண் பண்படுத்திய மொழி எவ்வகைப்பட்டதென்பதைப் பாருங்கள். .நிச்சயமாகவும் அல்லாஹ் ஈதுல்பித்தர் கொண்டாட்டம் வழங்கியிருப்பது, முத்தகீங்களுக்காகும் (இதயத்திற்க்குள் அல்லாஹ்வைப்பற்றி அஞ்சுகின்றவர்களுக்கு). அது முற்றிலும் மனநிறைவின் நாளாகும். இந்த ஈதுல்பித்தார் கொண்டாட்டத்தின் பெயரில் ஒரு விருந்தினர் கூட்டம் அமைத்துக்கொண்டபின் துணைப்பிரதமர் சூதூணை போன்றவர்களுக்கு இஸ்லாமின் அழகான போதனைகளை காலில்போட்டு மிதிப்பதற்க்கான சூழ்நிலையை உருவாக்கி கொடுக்கவும் செய்வது துரதிருஷ்டவசமானதாகும். அவர்கள் ஆட்சேபித்திருப்பது, நம் பிரிய தூதர் முஹம்மது (ஸல்) வின் நடைமுறையினையாகும். இந்த விருந்தினர் கூட்டம் அமைத்துக்கொண்டது புனித ஈதுல்பித்தர் முடிந்து ஒரு மாதத்திற்க்கு பிறகாகும். எல்லா முஸ்லீம்களுக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அன்னார் இருக்கவேண்டும். அன்னர் மட்டுமல்ல நாம் அனைத்து முஸ்லீம்களும் நல்ல முன்மாதிரியாகயிருக்க வேண்டியவர்கள் ஆவோம். ரமலான் மாதத்தின்போது நாம் மேற்க்கொண்ட நற்செயல்கள், முன்மாதிரிகள் நாம் மேலும் தொடர்ந்துக் கொள்ள வேண்டும். நாம் நல்ல எடுத்துக்காட்டாக திகழவேண்டியவர்களாவோம். நாம் எவருக்கும் மிரட்டல் விடுப்பவர்களாகயிருக்க கூடாது. ஜிஹாதைப்போன்ற வார்த்தையைப்பயன்படுத்தி எவரையும் ஒரு போதும் மிரட்டலுக்கு ஆளாக்ககூடாது. நாம் எவருக்கு முன்னாலும் தோக்குமாக செல்லக்கூடியவர்களல்ல. நாம் உண்மையில் அமைதியின் தூதர்களாவோம்.

ரமலான் மாதத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட போதனைகள் இதுவோ? அந்த இரவில் அங்கு அன்னாரின் சொர்பொழிவை கேட்பதற்க்கு வருகைதந்திருந்த முல்லாக்களும் முஸ்லீம்களும், எதிர்கட்சித் தலைவருக்கு எதிராக அன்னார் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தியபோது அதை நிறுத்திக்கொள்ளுமாறு அவர்கள் ஏன் கூறவில்லை? அந்த முல்லாக்களும் முஸ்லீம்களும் அன்னார் பயன்படுத்திய மோசமான வார்த்தைகளுக்கு எதிராக குரல் கொடுத்திருந்தால் அவர்கள் உண்மையான முஸ்லீம்களாகயிருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அன்னாருக்கு உடந்தையாகயிருந்தனர். இஸ்லாமின் பெயரில் எழும்புகின்ற அனைத்து தவறான விஷயங்களுக்கும் முன்னால் அவர்கள் பார்வையற்றவராகவும் செவிடராகவும் இருக்கின்றனர். ஜிஹாதின் பெயரில் எழும்பும் விவாதங்களுக்கு அவர்கள் கண்டனம் தெரிவிப்பதில்லை. அவர்கள் விரும்பும் வகையில், ஜிஹாதை வடிவமைத்திருக்கின்றனர். இப்போது மீடியோவிலும் மற்றும் மௌரிஷியஸை சார்ந்த ஏராளம் மக்களும் ஜிஹாத் என்ற கருத்திற்க்கு எதிராக முன்வந்திருக்கின்றனர். முஸ்லீம்களுக்கு எதிராக பெரும்பாலான மக்களின் உள்ளங்களிலும் வர்க்கபகையை அவர்கள் நுழைய செய்திருக்கின்றனர். மற்றொரு புறம் மௌரீயஸ் அஹ்மதியா முஸ்லீம் அமைப்பு 2017 ஜீலை 17 தேதியன்று ஒரு ஈது விருந்தினர் கூட்டம் அமைத்துக்கொண்டனர். அந்த கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்ற அரசியல்கட்சித் தலைவர்களுக்கும் அவர்கள் அழைப்பு விடுத்தனர்.இந்த விருந்தினர் கூட்டத்திற்க்காக ஏராளமான பணம் செலவு செய்திருந்தனர். இதில் முற்றிலும் நன்கல்லாத ஒருவி'யம், இந்த மேடையில் அரசியல் வாதிகளை அழைத்து அமரவைத்துக்கொணடனர் என்பதாகும். மற்று அதிதிகளுக்கும் அழைப்பு விடுத்தனர். 5-ம் கலீ.்.பாவின் ஒரு பிலீமும் (film) அந்நிகழ்ச்சியில் ஒளிபரப்பிக்கொண்டார்கள். ஈதுல்பித்தரின் தத்துவ ஞானம் என்பது இதுவோ? இங்கு எடுத்துரைக்கவேண்டிய ஒரு விஷயம், மௌரிஷியஸில் வாழும் எல்லா அஹ்மதிகளும் எல்லா நேரங்களிலும் ஒரே முகங்களை அல்லது ஒரே குடும்பத்தைத்தான் ஜமாஅத்தின் முக்கிய நபர்களாக எண்ணிக்கொள்கின்றனர். ஏழைகளையும் சாதாரண மக்களையும் மற்றும் சந்தா அளிப்போர்களையும் எதிலும் காண்பதில்லை. மௌரிஷியஸ் அஹ்மதியா ஜமாஅத்திலிருந்து அல்லாஹ்வின் ஒளி மறைந்துபோய்விட்டது. அது மட்டுமின்றி பர்தா ஆசாரவும் அவர்களில் இல்லை. அவர்களின் அழைப்பின்படி பாராளுமன்றத்திலிருந்து

வருகைதந்த பெண் சபாநாயகரை ஆண்களின் மத்தியில் அமரவைத்தனர். ஆன்மீக நிகழ்ச்சிகளில் பெண்களுக்கு அழைப்பு விடுப்பதை நான் தவறு என கூறவில்லை. ஆனால் பெண்கள் பெண்களிடத்தில் அமரவேண்டும். பெண்களுக்கும் ஒரு தலைவி இருக்கவேண்டும். அஹ்மதியா பெண்கள் பர்தா அணிந்துக்கொண்டு, அழைப்பை யொட்டி வருகை தரும் பெண் அதிதிகளை வரவேற்க்கவேண்டும். இப்போது மற்றொரு ஜமாஅத்தையும் அதற்க்கு ஒரு பிரதிநிதியையும் அல்லாஹ் எழுப்பிக் கொள்வதற்க்கு காரணம், இஸ்லாமிலிருந்து அவர்கள் விலகி சென்றதனாலாகும். தீவிரவாதிகளால் அழித்துக்கொள்ளவும் களங்கப்படுத்திக் கொள்ளவும் செய்த ஜிஹாத் என்ற வார்த்தையின் விரிவான விளக்கத்தை அளித்திட வேண்டியது இந்நூற்றாண்டின் இறைவனின் பிரதிநிதி என்ற நிலையில் எனது கடமையாகும்.

**ஜஹதா என்ற வார்த்தையிலிருந்தே ஜிஹாத் என்ற சொல் உற்ப்பத்தியாகியது. இதன் பொருள் கடினமாக முயற்ச்சித்துக் கொள்தல், முடிந்தவரையில் முயற்ச்சி செய்தல் போன்றவையாகும். ஜிஹாத் என்ற சொல் திருக்குர்-ஆனில் பயன்படுத்தப்படுகின்றது. அதன் அர்த்தம் துணைபிரதமர் சூதுான் கூறியது போலவோ, அல்லது திவிரவாதிகள் கூறுவது போலவோ, அல்ல. அதைக்குறித்து அறியாமையான மக்கள் கூறுவது போலவோ அல்ல. உங்களை தவறான நிலையில் நம்ப வைக்க அவர்கள் முயர்சிகின்றனர். ஜிஹாத் மூன்று வகையிலுள்ளது.**

1. **Jihad-i-Akbar>** ஜிஹாத் அக்பர் (மிக பெரிய ஜிஹாத்)

2. **Jihad-i-Kabir>** ஜிஹாத் கபீர் (பெருமையான (ஜிஹாத்)

3. **Jihad-i-Saghir>** ஜிஹாத் சஹீர் (சிறிய ஜிஹாத்)

## 1. Jihad – i – Akbar > ஜிஹாத் அக்பர் (முற்றிலும் பெரிய ஜிஹாத்)

ஒருவர் தம் உடலளவிலான விருப்பங்களுக்கு எதிராக ஆற்றலுடன் செயல்பட்டுக்கொள்வதை ஜிஹாத் அக்பர் என கூறிக்கொள்ளலாம். மோசமான தொடர்புகளுக்கு எதிராக, தீயசெயல்களுக்கு எதிராக அதாவது ஒருவர் தம் “நப்ஸின்” தவறான நோக்கங்களுக்கு எதிராக ஓய்வின்றி செய்யும்

போராட்டத்தை முற்றிலும் பெரிய ஜிஹாத் எனகூறலாம். இது நம் அனுதின வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய மிக சிறந்த கடமையாகும். முற்றிலும் மகத்துவம்வாய்ந்த இந்த போராட்டத்தில் நாம் நம் மிருகநிலையிலிருந்து வெளியேவரவேண்டும். மிகதாழ்ந்த நிலையிலிருந்து மீட்சியைப்பெற்று, ஒரு மனித தன்மையுடையவனாக பரிணமித்துக்கொள்வதற்கான ஒரு கடினமான முயற்சி அதுவே ஜிஹாத் அக்பர். ஜிஹாத் அக்பர் என்றால் அதாவது நல்லொழுக்க தன்மைகளைப்பெற்று ஆன்மீக முன்னேற்றத்தை அடைவதற்க்கு மனிதனின் மேற்க்கொள்ளும் அனுதின செயல்களாகும்.

## 2. Jihad-i-Kabir-ஜிஹாத் கபீர் (பெருமை வாய்ந்த ஜிஹாத்)

இஸ்லாமின் அமைதிச் செய்தியை எங்கும் பரப்பிக்கெள்ளவேண்டும் என்பது ஒவ்வொரு முஸ்லீம்களுடையவும் கடமையாகும். இந்த உண்மை செய்தியை அதாவது இந்த அமைதி செய்தியை பரப்புகின்ற வேளைகளில் நாம் நினைவுகொள்ள வேண்டிய இறைவசனம் இதுவாகும்.

**"மார்க்கத்தில் எவ்வகையான நிற்ப்பந்தமும்மில்லை".**

(2-257)

சமாதானச் செய்தியை பரவச்செய்வது முஸ்லீம்கள் என்ற நிலையில் நமது கடமையாகும். அவ்வேலையில் நாம் முழுகும்பொழுது நாம் இதயதுாய்மையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும். "ஒரேயொரு இறைவனே இருக்கின்றான்." அனைவரும் அக்கருத்தை அங்கீகரித்து கொள்ளவேண்டும் என்று எவ்வித நிற்பந்தமும் செலுத்த இஸ்லாம் ஒரு போதும் கூறியதில்லை. அவ்வாறு எவராவது செயல்ப்பட்டால் அத்தகையாளர்கள் முஸ்லீம்களோ இஸ்லாமின் அமைதிச்செய்தியை பரப்பிகொள்கிறவர்களோ அல்ல. அத்தகையாளர்கள் தீவிரவாதிகளும் பயங்கரவாதிகளுமானவர்கள். இஸ்லாமின் பகைவர்களும் அவர்களே தாம். இஸ்லாம் முற்றிலும் சிறந்த மதம். அதுவொரு வாழ்க்கை முறையாகும். அமைதியின் வழியாகும். ஒவ்வொரு மனிதனும் தம் உடல்விருப்பங்களுக்கு கீழ்படியாமல் அனுதினமும் நல்லொழுக்கதன்மையை உயர்திபிடித்து, ஆன்மீகவழியில் முன்னேற்றத்தைப்பெற்று இறையருகாமையை அடைந்திடவேண்டும் என இஸ்லாம்

கற்பிக்கின்றது. இக்கூறும் மிக பெரிய ஜிஹாதில் நாம் வெற்றியடைந்தால் நாம் உன்னத இடத்தை அடைந்துவிட்டோம். அந்நேரம் அமைதியுடனும் இறை உதவியுடனும் மக்களுக்கு இறைவன்பால் அழைப்பு விடுக்கமுடிந்துவிடும். இறைவனுக்காக சுயம் அர்ப்பித்துக் கொள்ளுங்கள். அது மூலமாக மானிட மோட்சம் என்ற செய்தியை நமக்கு மானிடகுலத்திற்க்கு பகிர்ந்துகெள்ள முடிந்துவிடும்.

### 3. Jihad-i-Saghir ஜிஹாத் சஹீர்: சிறிய ஜிஹாத்

இது அரசாங்கவுமாக தொடர்புடைய ஜிஹாத் ஆகும். இங்குநான் கூறிக்கொள்ள் விரும்புகிறேன். இந்த ஜிஹாத் என்பது ஒரு போர் ஆகவோ போராட்டமாகவோ ஆகலாம். இத்தகை சூழ்நிலையில் நாம் ஆயுதம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கும். ஆனால் நான் மேலும் மேலும் உறுதியுடன் கூறுகின்றேன். பகைவர்கள் நம்மை தாக்கிக் கொள்ள வரும்பொழுது நாம் சுயபாதுகாப்புக்காக மேற்க்கொள்ளும் போராட்டமாகுமிது. அத்தகைய சூழ்நிலையில் சுயபாதுகாற்ப்புக்காக மட்டுமே ஆயுதத்தை எடுக்கவேண்டுமென இஸ்லாம் உறுதியாக தெரிவிக்கின்றது. பாதுகாப்புறக்காக செய்யும் போர் அன்றி வேறெந்த போரும் இஸ்லாமில் இல்லை. அல்லாஹ்வும் அவனது தூதர் முஹம்மது(ஸல்) அவர்களும் இத்தகை பாதுகாப்பு (தடுப்பு) போருக்குமட்டுமே அனுமதியளித்திருப்பது. நோண் இஸ்லாமிக அரசாங்கங்கள்க்கூட பாதுகாப்பு போருக்கு அனுமதியளித்திருக்கின்றனர் என்பதை இத்தருணத்தில் நாம் நினைவுகொள்ள வேண்டும். ஒரு முஸலீம் என்ற நிலையில் தம் உயிரினையும் செல்வங்களையும் பாதுகாப்பதற்கான ஒரு உரிமை மட்டுமே ஜிஹாத் சஹீர். இஸ்லாமை முழுமையாக அழித்துக்கொள்வதற்க்காக பகைவர்கள் மேற்க்கொள்ளும் தாக்குதலை தடுத்துக்கொள்ளுதலாகும் உண்மையில் ஜிஹாத் சஹீர். இது முற்றிலும் நம்பாதுகாப்புக்காக மேற்க்கொள்ளும் போர் ஆகும். இது ஒரு போதும் அத்துமீறிச்செய்யும் ஒரு போர் அல்ல. முஸ்லீம்களோ அல்லாதவர்களோ ஆன சகோதரர்களை அங்கு சென்று தாக்கிகொள்வதற்க்கு இஸ்லாம் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. பௌதீக உலகில் அவர்களின் செல்வங்களை கொள்ளை செய்வதற்க்கோ அவர்களின் பதவிகளை பறித்துக்கொள்வதற்கோ இஸ்லாம் ஒரு போதும் அனுமதிப்பதில்லை. இராஜியங்களையோ மற்று பகுதிகளையோ கைவசப்படுத்துவதற்க்கும் இஸ்லாம்

அனுமதிப்பதில்லை. உலகில் இஸ்லாமின் வேரினை நிலைநாட்டுவதற்க்காகவும் இஸ்லாமின் உண்மையை தக்கவைத்துக்கொள்வதற்காகவும் இறைவழியில் சுயம் எதிர்த்து நின்று ஆற்றல் பெற்றுக்கொள்வதற்கான ஒரு அனுமதி மட்டுமே ஜிஹாத் சஹீர். ஆயுதங்கள் இல்லாமலும் இந்த ஜிஹாதை செய்துக்கொள்ளலாம். நீங்கள் ஒரு முஸ்லீம் ஆக இருக்கும் காரணத்தால் ஒருவர் உங்களை கொலை செய்ய வந்தார் என எண்ணுங்கள் அந்நேரம் உங்களிடம் எந்த ஆயுதமும் இல்லை என எண்ணுங்கள். அச்சூழ்நிலையில் இறை உதவி காரணத்தால் உங்களின் நல்ல பேச்சுவார்த்தைகளும் துவாவும் கொண்டு உங்களை தாக்குவதற்கு வந்த நபரின் மனம் மாறிவிடலாம். உங்களை தாக்குவதிலிருந்து அன்னார் பின்திரும்பிக்கொள்ளலாம். ஒருவேளை அன்னாரும் ஒரு முஸ்லீமாக மாறிவிடவும் செய்யலாம். அதற்க்கான உதாரணம் நமக்கு இருக்கின்றது.

இஸ்லாமின் ஆரம்பகட்டத்தில் இஸ்லாமின் மிகபெரிய பகைவனாயிருந்த உமறிப்னு கத்தாப் தம் வாளுமாக முகம்மது(ஸல்) அவர்களை கொலைசெய்திட வந்தார். அன்னார் வரும் பாதையில் வைத்து தம் சகோதரியும் மைத்துனரும் இஸ்லாமை ஏற்றுக்கொண்டதாக அன்னார் கேள்விப்பட்டார். அப்போது அவர் தம் சகோதரியின் மனையை நோக்கி சென்றார். அன்னார் மிக கோபமுடையவராகயிருந்தார். கையில் வாளும் இருந்தது. அன்னார் அம்மனையின் அருகாய்மையை அடைந்தபோது அம்மனையிலிருந்து சூர: தாஹா ஓதிக்கொள்வதன் ஒலியைக் கேட்டார்.

முதலில் அன்னார் தம் சகோதரியையும் மைத்துணரையும் தாக்கினார். சகோதரிக்கு முறிவுபற்றியது. இரத்தம் வருவதை கண்டபோது தம் செயலைக் குறித்து அன்னார் கவலையுடையவராகினார். மட்டுட்டுமின்றி நீங்கள் ஓதிக்கொண்டிருந்த அந்த இறைவெளிப்பாடுகளை மேலும் ஓதிக்கொள்ளுமாறு அவர்களிடம் கூறினார். இறைவெளிப்பாடுகளை தொட்டுக்கொள்வதற்க்கு முன்னதாக குளித்து சுத்தமாக வருவதற்க்கு அவர்கள் கூறினார்கள். சுத்தமானபின் அன்னார் சூரா: “தாஹா”வை ஓதிக்கொண்டார். அதை தொடர்ந்து அன்னார் திருநபி(ஸல்)வை சந்திப்பதற்க்காக சென்றார். அன்னாரின் உள்ளம் முழுவதும் முஹம்மதை (ஸல்) குறித்த பகையால் நிறைந்திருந்தது. ஆனால்

முஹம்மது (ஸல்) அவர்களை கொன்றிடுவதற்க்கு தீட்டிய திட்டத்திற்க்கு மாறாக அன்னாரின் உள்ளத்தில் இஸ்லாம் நுழைந்துவிடவும் அன்னார் முஸ்லீமாக மாறிடவும் செய்தார். மேலும் அன்னார் ஒரு விஷயத்தை உணர்ந்துக் கொண்டார். அதாவது இஸ்லாமின் பெரியபகைவர்களாகயிருந்த உமரோ அல்லது அபுஜாஹிலோ இந்த இரண்டில் ஒருவர் இஸ்லாமில் நுழைந்து கொள்ளுமாறு முஹம்மது(ஸல்) அவர்கள் துவா செய்திருநந்தார். அல்லாஹ்வின் அருளால் முடியாது என்று எண்ணும் விஷயங்களைக் கூட முடிந்துவிடலாம். இஸ்லாமின் மிகபெரிய ஒரு பகைவர் இஸ்லாமின் மிகபெரிய பாதுகாவலராக மாறிக்கொண்டார். அன்னர் இஸ்லாமின் இரண்டாவது கலீ'.பாவாகவும் மாறிவிட்டார். இன்றும் நாம் அன்னாரை மதிப்புடன் **உமறுல் பாறுக்** என அழைக்கின்றோம். (உண்மையும் பொய்மையும் வேறுப்படுத்துகின்றவன்.)

கடந்த கால இறைதுாதர்களின் தலைவராக திகழும் முஹம்மது (ஸல்)வின் முன்மாதிரியை பின்பற்றுங்கள். தனக்காகவோ தன் குடும்பத்திற்காகவோ, இன்று சாதாரண முஸ்லீம்கள் கூறுவது போன்று எந்த ஜிஹாதும் அன்னார் செய்ததில்லை. அன்னார் மேற்கொண்ட அனைத்துப் போராட்டங்களும் இறைவிருப்பத்திற்க்கு உட்ப்பட்டவையாகவேயிருந்தது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்ட முறையிலாகவே இருந்தது. இது, அரேபியாவிலும் உலகிலும் இஸ்லாமை நிலைநாட்டுவதற்க்கும் அதன் மதிப்பை நிலைநிற்கச் செய்வதற்க்குமாகவே ஆகும்.

**தம் மகளாகிய சைனபினுடயவும் தம் பேரப்பிள்ளையுடையவும் மரணம் சம்மந்தமாக பகைவர்கள் கோபமூட்டச்செய்திருந்தும் அன்னார் தனிப்பட்ட முறையில் பதிலுக்கு பதில் செய்ய ஆயத்தமாகவில்லை. மாறாக அன்னார் ஒரு முழுமை பெற்ற மனிதன் என்ற நிலையிலும் ஒரு பரிபுரணமான இறைத்தூதர் என்ற நிலையிலும் ஒரு எடுத்துக்காட்டாக அன்னார் பரிமாறிக்கொண்டார். முற்றிலும் பெரிய முன்னுரிமை அன்னார் அல்லாவிற்க்கும் அல்லாஹின் மகத்துவத்திற்க்கும் அவனது வல்லமைக்கும் அளித்தார்.** தம் மக்களுடையவும் பேரப்பிள்ளைகளுடையவும் மரணத்திற்க்கு காரணமாகியவர்களுக்கு அன்னார் மன்னிப்பளித்தார். அல்லாஹ்வின் மகத்துவத்தை பாதுகாப்பதற்க்காகவேயிருந்தது, அன்னாரின்

அனைத்து செயல்களும்! அது வழியாக மக்களின் மனதுக்கு மாற்றத்தை ஏற்ப்படுத்திட முடிந்தது. அல்லாஹ்வின் மகத்துவத்தை அவர்கள் உணர்ந்திடவும் செய்தனர். நிச்சயமாகவும் மக்கள் மனதிற்க்கு மாற்றத்தை ஏர்படுத்துவதற்க்கான ஆற்றல் அன்னாருக்கில்லை. ஆனால் இவ்விஷயத்தில் அல்லாஹ் அன்னாருக்கு மிக பெரிய அளவிற்கு உதவியளித்தான். அன்னார் அதற்கு உகந்தவகையிலான முயற்ச்சிகளை மேற் கொண்டபோது அல்லாஹ் அவனது வல்லமையைக் கூட அளித்து, மிருக குணமுடையவர்களின் இதயத்தில் ஒளியை நுழையச்செய்து, அவர்களை முஸ்லீம்களாக மாற்றிக் கொண்டான். அதைப் போன்றே இறை உதவியால் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் ஜிஹாத் அக்பர், ஜிஹாத் கபீர், ஜிஹாத் சஹீர் போன்றவை எவ்வாறு என்பதையும் வாழ்கையின் பல்வேறு துறைகளில் அதை எவ்வாறு செயல்படுத்திட வேண்டும் என்பதையும் மக்களுக்கு கற்பித்தார். அன்னார் அதில் வெற்றியடைந்தார்.

பெரும்பான்மை முஸ்லீம்களும் சரியான முறையில் உணர்ந்துக்கொள்ளாத ஜிஹாதின் சுருக்கமான விளக்கமாகுமிது. நம் உறுப்பினர்களுக்கும் அதாவது ஜமா அத்துச் சஹீ ஹில் இஸ்லாமிலன் தோழர்களுக்கும் உலகெங்குமுள்ள முஸ்லீம் சகோதர- சகோதரிகளுக்கும் அதைபோன்றே ஜிஹாதின் அர்த்தம் என்ன என்பதை உணர விரும்புகின்றோர்களுக்கும் இந்த விளக்கம் உதவி புரியும் என எதிர்பார்க்கின்றேன். **ஜிஹாத் என்ற வார்த்தையை கேட்க்கும்பொழுது அது அஞ்சக்கூடிய ஒரு வார்த்தையல்ல என்பதை நாம் பகுத்தறிந்திட வேண்டும். ஜிஹாத் என்பது மிக அழகான ஒரு நல்லொழுக்க போராட்டமாகும். (சட்டத்திற்கு மாறான ஒரு விஷயமல்ல) வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மின் காலகட்டத்தில் அன்னார் கூறியது போன்று, இக்காலகட்டத்தின் ஜிஹாத் பேனையால் ஆகும். இஸ்லாமிற்கு ஆதரவாக ஆற்றல் வாய்ந்த வாதங்களை எடுத்து கூறி அதை செய்ய வேண்டும்.** அது மூலமாகவே உண்மையான இஸ்லாம் பரவிகொள்வதும் சஹீஹில் இஸ்லாம் மேலும் அமைந்துக்கொள்வதும் இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

## ISSUED BY:

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India

**Cell:** 9789180817
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com



## TRANSLATED BY:

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817